# எதிரணிகளுக்கு எதிராக அரசின் 'மரண படை!'


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 சித்திரை 06 இதழ் 87
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 19 — 04 — 1993



19-4-1993


(கொழும்பு)
மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் எதிர்க்கட்சிகளுக்கெதிராக பலாத்கார நடவடிக்கையில் ஈடுபட்டு, தேர்தலில் வெல்வதற்குரிய நடவடிக்கையில் இறங்கியிருப்பதாக பி. பி. ஸி தெரிவித்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

## தொண்டமானுக்கு எதிராக தீவிர பிரசாரம்

(கொழும்பு)
அமைச்சர் தொண்டமானுக்கு எதிராக லலித்-காமினி கட்சியினர் மலையகப் பகுதியில் தீவிர பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

(4-ம் பக்கம் பார்க்க

## பாதுகாப்பிற்கு கணக்கிடப்படாது பெரும் பணம் செலவு

(கொழும்பு)
பாதுகாப்பு செலவினம் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை விட மேலதிகமாக அதிகரித்துள்ளதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

### ● அரசின் ஆதரவுடன்

# தெரிவுக்குழுவிற்கு அப்பால் இனப்பிரச்னை தீர்விற்கு முயற்சி

## பிரட்மன் தீவிர ஆலோசனை

(கொழும்பு)

**இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றை காணும் முகமாக உகந்த ஒரு தீர்வுத்திட்டத்தை வகுக்கும் முயற்சியொன்று தெரிவுக்குழுவின் செயற்பாடுகளுக்கு அப்பால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

இந்த தீர்வுத் திட்டம் தொடர்பாக புத்திஜீவிகளும், நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முடிவுகளை ஜனாதிபதியின் சார்வதேசிவ ... காரங்களுக்கான ஆலோசகர் ... நிலையிலுள்ள திரு. பிரட்மன் வீரக்கோன் ... தமிழ்க்கட்சிகளுடன் மேற்கொள்ளப்பட்டு ... ஆலோசனை நடத்தவுள்ளனர். ... இம்முயற்சி வெற்றியளிக்கும் பட்சத்தில் தெரிவுக் குழுவின் செயற்பாடு ஸ்தம்பிதமடையலாமென ... இந்தப் புதிய முயற்சி ... கருத்து தெரிவித்துள்ளனர். ரி-சி

## அன்னை பூபதி நினைவு இறுதி நாள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)
32 நாட்கள் உண்ணாநோன்பு அனுஷ்டித்து ஈகைச்சாவு எய்திய தியாகி அன்னை பூபதியின் 5ம் ஆண்டு நினைவு நாள் இன்று தமிழீழப் பகுதி எங்கும் உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்படவுள்ளது.

இதையொட்டி தமிழீழப் பகுதி எங்கும் அடையாள உண்ணாவிரதங்களும் அன்னை பூபதியின் நினைவையொட்டிய அஞ்சலி நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

வீதிகள், பொது இடங்கள், பொதுமக்கள் கூடும் இடங்கள், சனசமூக நிலையங்கள் நிறுவனங்கள் யாவற்றிலும் அன்னை பூபதியின் உருவப் படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் நடாத்தப்பட்டுவருகின்றன.

யாழ். மாவட்டத்தில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் கோட்டங்களில் காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை உண்ணாவிரதமும் பொதுக் கூட்டங்களும் நடைபெறவுள்ளன.

(4-ம் பக்கம் பார்க்க)

## மாகாண சபைத் தேர்தல் முடியும்வரை வடக்கு-கிழக்கில் தாக்குதல்

(கொழும்பு)
மாகாண சபைத் தேர்தல் முடியும்வரை வடக்கு-கிழக்கில் தொடர்ந்தும் பல இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளதாக இராணுவ திசை ... வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. ... தெற்கில் ஏதாவது வெடிகுண்டுத் தாக்குதலை நடாத்துவதை தடுக்க ... திருப்பவுமே வடக்கு-கிழக்கில் மாகாண சபைத் தேர்தல் முடியும்வரை ... இராணுவத்தாக்குதல்கள் இடம்பெறவுள்ளனவாம்.

இதேவேளை விடுதலைப் புலிகள் வடக்கு-கிழக்கிலிருந்து கொழும்பு நகரினுள் ஊடுருவதை தடுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவாம். ரி

## தமிழ் அகதிகள் வீட்டின் மீது ஜெர்மனில் குண்டுத் தாக்குல்

(பெர்லின்)
ஜெர்மனியின் தென்மேற்கு எல்லையோரமாயிருக்கும் சுயிபிருக்கன்' என்னுமிடத்திற்கு அருகிலுள்ள பகுதி ஒன்றில் இலங்கை தமிழ் அகதிகள் இல்லம் மீது பலத்த பெற்றோல் குண்டுத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

குண்டுத் தாக்குதலுக்கு வீடு இலக்காகியபோது வீட்டினுள் ஐந்து இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியிருந்தனர். எனினும் எவருக்கும் ... ஏற்படவில்லை என 'ராய்ட்டர்' செய்தி தெரிவித்தது.

இத்தாக்குதல் தொடர்பாக மூவர் ஜெர்மன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனராம். இவர்கள் பலத்த விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். ரி சி,

## தமிழ்க் கட்சிகள் தொடர்ந்தும் பகிஷ்கரிக்கும்

(கொழும்பு)
நாடாளுமன்ற தெரிவுக் குழுவை தமிழ்க் கட்சிகள் தொடர்ந்தும் பகிஷ்கரிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தெரிவுக்குழுவில் தமிழ்க்கட்சிகளை மீண்டும் அங்கம் வகிக்க மேற்கொள்ளப்பட்டு வந்த முயற்சிகள் பலனளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தெரிவுக்குழுவிற்கு அப்பால் தீர்வு காணும் முயற்சிக்கு தமிழ்க்கட்சிகள் ஆதரவு தெரிவிக்கலாமெனக் கூறப்படுகிறது. (சி)

### பத்திரிகையாளர் மீது தாக்கு:

## கட்டாய லீவில் பொலிஸ் அதிகாரி

(கொழும்பு)
பனித உரிமைகள் தினத்தன்று பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல் நடாத்தப்பட்டது தொடர்பாக கொழும்பு கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கட்...

(4ம் பக்கம் பார்க்க!

### வவுனியாவில்

## 56,000 தமிழர் அகதிகளாயினர்

(வவுனியா)
வவுனியாவில் ஸ்ரீலங்காப் படையினர் இதுவரை மேற்கொண்ட பல்வேறு இராணுவ நடவடிக்கைகளால், சுமார் 56 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் அகதிகளாக வெளி...

(4-ம் பக்கம் பார்க்க)

### மன்னார், வவுனியாவில்

## ஆறு மணி நேர ராணுவ தாக்குதல்

(கொழும்பு)
மன்னார், வவுனியா பகுதிகளில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நேற்று மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டதாக கூட்டுப்படை தலைமையகம் தெரிவித்தது.

நேற்றுக்காலை 6-00 முதல் நண்பகல் 12 00 மணி வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலேயே மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக கூட்டுப் படைத்தலைமையகம் மேலும்

(4-ம் பக்கம் பார்க்க,

### ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)
மன்னார், வவுனியா மாவட்டங்களில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில், நேற்றுக் காலை 6-00 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நேற்று நண்பகல் 12-00 மணியுடன் நீக்கப்பட்டதாக கூட்டுப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது. (ரி சி)

## வரி விளம்பரம்

### மணமக்கள் தேவையா

எம்மிடம் உங்களுக்குத் தேவையான மணமக்கள் பலர் இருக்கிறார்கள் சந்திப்பு ஞாயிறு காலை. மங்களா ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். (இ-8)

### தேவை

செரலிக்ஸ், வீவா, பேசத்தக்கள் தேவை. றபர் மூடியுடன் கூடியது. Taste Line Industries (PVT) Ltd. No: 14, Seenier Lane, Jaffna. (A-3024)

### பயிற்சி

Basic, d Base I + Lotus 1, 2, 3, Word Processing பயில விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். Unikco Computer Center, 37, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (ஏ-3020)

### தவறிவிட்டது

எனது அடையாள அட்டை இல: 485400192V ஆலயமேனியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பூபாலசிங்கம் திலகவதி, ரஜனி மஹால், உடுவில், சுன்னாகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும் (சி-23)

### வியாபாரிகளுக்கு

தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள், மணப்பெண் சோடனை நகைகள், லேஸ் நூல் வகைகள், சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு அழகு சாதனப் பொருட்களை பெற்றுக்கொள்ள ஜெயா அழகுசாதன மாளிகை 177-A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (எ 3042)

### மீண்டும் இயங்குகிறது

சோதிட விலாசபுத்தகசாலை 46, பெரியகடை, யாழ்ப்பாணம் சோதிட, வைத்திய, விஞ்ஞான புத்தகங்களும் பாடசாலைப் புத்தகங்களும், உபகரணங்களும் விற்பனையாகின்றன. ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சோதிடப்பிரகாச அச்சுயந்திரசாலை, கொக்குவில். (எ-3022)

### வகுப்புகள்

German & English Languages— ஜெர்மனியின் பல்கலைக் கழக மேற்படிப்புகளை தொடர்வதற்கு உதவுமுகமாக புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன. ஜெர்மன் பல்கலைக் கழக அனுமதி பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்க:- S Sornalingam Secretary, German Cultural Association, 4 Gopal Lane, Vannarponnai Jaffna (மனோகரா தியேட்டர் அருகாமையில்) (சி-21)

மேலதிக

### அரச அதிபர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இளைஞர் திட்டம் சம்பந்தமாகக் கலந்துரையாடுவதற்கு சகல உதவி அரசாங்க அதிபர்களையும் இன்று 19ம் திகதி திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ் செயலகத்தில் கூடுமாறு யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் கோரியுள்ளார். (159)

---

# முக்கிய அறிவித்தல்

யாழ். குருநகர் வர்த்தகர் சங்கத்தின்

## பொதுச்சபைக் கூட்டம்

எதிர்வரும் 21-04-93 புதன்கிழமை பி. ப. 3 30 மணியளவில் குருநகர் சந்தை கட்டட இல 5, காரியாலயத்தில் தலைவர் திரு மி யேசுதாசன் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெறும் இக்கூட்டத்திற்கு குருநகர் எல்லைப் பிரதேசத்தில் உள்ள பெரிய, சிறிய வர்த்தக ஸ்தாபன உரிமையாளர்கள் அனைவரையும் சமூகம் தருமாறு வேண்டுகின்றோம்.

இக்கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை யாழ் மாவட்ட தொழிற்சங்க உறுப்பினர்களும் குருநகர் பகுதி கடற் புலிகளின் அரசியல்துறை உறுப்பினர்களும் சமூகம் கொடுப்பார்கள்.

மி. யேசுதாசன் — தலைவர்
க. சி கிருஷ்ணன் — செயலாளர் (சி 24)

---

# அறிவித்தல்

## கணக்கு மீதிகளைச் சரிபார்த்தல்

30-06-91 திகதியிலும் 30-06-92 திகதியிலும் வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துடனான கொடுக்கல் வாங்கல்கள் சரியான மீதிகளை தங்கள் கணக்குகளுடன் சரிக மீதிகளைப் பார்வையிட்டு 18. 04. 93 — 30. 04. 93 க் கிடையில் சரிசெய்து கொள்ளுமாறும் உறுதிப்படுத்திக்கொள்ளுமாறும் வேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

30-04-93 க்கு பின் சங்கப் புத்தகங்களின் படியே மீதிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுக் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

நன்றி

— பொது முகாமையாளர்

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(எ 3061)

---

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,

சங்கானைப் பிரிவு

# ஆடைகள்

பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் ஏற்ற ஆடைகள் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் சான்றிதழ் பெற்ற பெண்களால் தைத்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளுமிடம்:

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,**
(யாழ். கிளை)
வலி மேற்குப் பிரிவு,
மாவடி, வட்டுக்கோட்டை.

கௌரவ செயலாளர்.
73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(ஏ-3060)

---

வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழக வளர்ச்சி நிதிக்காக நடாத்தப்படும்

## மாபெரும்

# இசை நிகழ்ச்சி

இடம்: வட்டு விளையாட்டுக்கழக மைதானம்
காலம்: 20-04-93 செவ்வாய் மாலை 7 மணி

யாழ் ரமணனின்

## ராஜன் இசைக்குழு

வழங்கும்

# 'இதய கீதங்கள்'

யாழ் பல்கலைக்கழக ஊழியர்கள் வழங்கும்

## குழந்தை சண்முகலிங்கத்தின்

## "உறவுகள்"

(சமூக நாடகம்)

பிரவேசம்: ரூபா பத்து

— வட்டு. விளையாட்டுக் கழகம்

(எ 3062)

---

# 31ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 13 | 01 | 1963

மறைவு: 19 | 03 | 1993

★ ★ ★ ★ ★ ★

அமரர்

## கதிரமலை முருகதாஸ்

(முன்னாள் விளையாட்டு பகுதி பொறுப்பாளர், உயர்கல்வி கல்லூரி, நோர்வே)

அன்னாரின் பிரிவால் துயருறும்:

தாய், தந்தை சகோதரர்கள், உற்றார், உறவினர்களுக்கு எமது சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கும் அதே வேளையில் ஆத்ம சாந்திக்காக இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.


இந்து வாலிபர் சங்கம்
வட்டு. தென் மேற்கு. வட்டுக்கோட்டை.
வட்டுக்கோட்டை

(சி-25)

---

1ஆம் ஆண்டு

# நினைவு அலைகள்



அமரர்

## கணபதிப்பிள்ளை ஜெயகோபால்

[செந்தி]

அன்னை மடியில்: 16-09-1952
ஆண்டவன் பிடியில்: 30-04-1992

திதி: 19-04-1993

கண்ணுக்கெட்டாத தூரத்தில் காற்றோடு காற்றாக
கலந்துவிட்ட எம் அன்புத் தெய்வமே!
ஆருயிர் அப்பாவே! எம்மைவிட்டு
நீர் எங்கு பறந்தனையோ?
தாயான நான் இங்கு துடித்து மடிகின்றேன்
உன் உடன்பிறப்புகள் நாங்கள் உன்னை எண்ணி
மெழுகாய் உருகுகின்றோம்
மாமா என்றழைக்க மருமக்கள் நம் காத்திருக்க!
எம்மை மறந்து நீங்கள் எங்கு சென்றனையோ?

உம்பிரிவால் துடிப்பாய்த் துடிக்கும்
அன்பின்
மனைவி, பிள்ளைகள், தாய்,
சகோதரர்கள், மருமக்கள்,
பெரிய மாமி, மச்சாள், பிள்ளைகள்.

ஊஞ்சபை வீதி,
மானிப்பாய்.

8 ம் வட்டாரம்,
மண்டைதீவு

(சி-22)

# மண்ணுக்காக தம்மை அர்ப்பணித்த அன்னைபூபதி

# கால வெள்ளத்தால் அழியாத தனிச் சரித்திரம்!

## விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு அறிக்கை

(யாழ்ப்பாணம்)

'மண்ணுக்காகத் தம்மை அர்ப்பணித்த தியாகிகளுள் அன்னை பூபதி கால வெள்ளத்தால் அழியாத ஒரு தனிச்சரித்திரம்'' இவ்வாறு அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவாக விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு வடிவங்களில் முன்னேற்றம் கண்டுவரும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழீழப் பெண்ணினம் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளது. அறுபதுகளில் எழுந்த அகிம்சைவழிப்போராட்டத்தில் பெண்கள் அலைஅலையாக அணி திரண்டனர். அதனையடுத்து புலிகளின் தலைமையில் உருவம் பெற்ற ஆயுதப் போராட்டத்திலும் பெண்கள் கணிசமான அளவு பங்களித்து வருகின்றனர். அனைத்து அடக்குமுறைக்கு எதிராகவும் அணி திரண்டு போராடிக்கொண்டிருக்கும் பெண்ணினம் விடுதலைக்காக மகத்தான அர்ப்பணிப்புகளைச் செய்து வருகின்றது.

இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் எமது மண்ணில் காலடி எடுத்து வைத்து, மக்களை அழித்து எமது போராட்டத்தை நசுக்கிக் கொண்டிருந்த வேளை அன்னை பூபதி தனது அறப்போரை ஆரம்பித்தார். அன்னை பூபதியின் இப் போராட்டம் ஒரு தனிப்பட்ட பெண் உள்ளத்தின் கொதிப்பல்ல. ஒரு தேசிய இனத்தின் சுதந்திர எழுச்சியின் வெளிப்பாடு.

மிகவும் இக்கட்டான, நெருக்கடியான சூழ்நிலையில் எமது தாயக பூமியின் மூலை முடுக்கெல்லாம் அந்நிய இராணுவத்தின் ஆதிக்கச்சுவடுகள் பதிந்திருந்த வேளையில், சாதாரண மக்கள் எவரும் துணிந்து போராடத் தயங்கிய நேரத்தில் அன்னை பூபதி தனது அறப்போராட்டத்தினை நடாத்தினார்.

தனது 58-வது வயதில் அவர் மேற்கொண்ட இந்தத் தியாகப் போராட்டம், அவரது மனவுறுதியையும், கோப்பற்றையுமே காட்டி நிற்கின்றது. போராட்டத்தைக் குழப்புவதற்கு இந்திய ஆக்கிரமிப்புப் படை எத்தனையோ மிரட்டல்கள் அச்சுறுத்தல்களை மேற்கொண்டபோதும் அவற்றிற்கெல்லாம் பணியாது அவர் தனது போராட்டத்தைத் தொடர்ந்தார். அவரது தியாகப் போராட்டம் பெண்ணினத்திற்கெல்லாம் முன் உதாரணமாக அமைந்தது.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காரணமாக தமிழீழப் பெண்கள் எத்தனையோ அடக்குமுறை, ஒடுக்குமுறைகளுக்குள்ளாகிக்கொண்டிருந்த வேளையில் அன்னை பூபதி தனது அகிம்சைப் போராட்டத்தினால் பெண்ணினத்தை எழுச்சி பெறச் செய்தார்.

குடும்ப உறவுகள், சுயநலப் பற்றுக்கள் என்பவற்றைத் துறந்து, எமது இனம், எனது தேசம், எனது மக்கள் என்ற பரந்த அடிப்படையிலான நோக்கத்திற்காக அவர் நடாத்திய இந்தத் தியாகப் போராட்டம் அதி உன்னதமானது. 32 நாட்கள் நீராகாரம் எதுவுமின்றி தன்னையே உருக்கி தாயகத்திற்கு ஈந்த இந்தத் தற்கொடை இதுவரை உலக வரலாற்றில் நிகழாத ஓர் போராட்ட சம்பவமாகும். விடுதலை இலட்சியத்திற்காக சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து, உயிர்த் தியாகம் செய்த உலகத்தின் முதற் பெண்மணி என்ற பெருமையை அன்னை பூபதி எமது போராட்டத்திற்குத் தேடித்தந்தார்.

போராட்டத்தின் எழுச்சிக் குரலாக பெண்குலத்தின் சக்திவடிவமாக அன்னை பூபதி 19-04-1988 அன்று தனது 58-வது வயதில் எமது தேசத்தின் அணையாத தீபமானாள்.

அன்னை பூபதி தனது அகிம்சைப் போராட்டத்தில் தன்னைத் தற்கொடையாக்கி 5 வருடங்கள் மறைந்துவிட்டபோதும், அவரது தியாகம் என்றென்றும் எமது மக்கள் மனங்களில் அணையாத, சுதந்திர சுடராக நிலைத்துவிட்டது.

எனவே இத்தகைய தற்கொடையாளி அன்னை பூபதியை நினைவுகூரும் இப்புனித நாளில் எமது விடுதலைப் போராட்டத்தில் தமக்குள்ள தேசியக் கடமையை உணர்ந்து அனைத்துத் தமிழீழப் பெண்களும் அணிதிரண்டு போராட்டத்தை முனைப்புடன் முன்னெடுக்க உறுதிபூண வேண்டும். (வி)

### ஒருமாத காலமாக

# அன்னை பூபதி நினைவுநாள்

# உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைக்காக தனது இன்னுயிரைத் தியாகம் செய்த தியாகி அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாட்களின் நிறைவு தினம் இன்று தமிழீழமெங்கும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்திய ஆக்கிரமிப்பு படைகளுக்கு எதிராகவும் அகிம்சை போராட்டம் நடாத்தி தியாக மரணமடைந்த தியாகி பூபதி கணபதிப்பிள்ளையின் நினைவு நாட்கள் கடந்த ஒரு மாத காலமாக தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

யாழ்.குடாநாட்டில் பொது நிறுவனங்கள் கிராம அபிவிருத்திச்சங்கங்கள், சனசமூக நிலையங்கள், சமூக சேவைகள் அமைப்புகள், மாதர் சங்கங்கள், தனியார் இல்லங்கள், விடுதலைப்புலிகளின் அலுவலகங்கள் பாசறை போன்றவற்றில் விசேட பந்தல்களின் கீழ் மலர் தூவி மங்கள விளக்கேற்றி தியாகி அன்னைபூபதியின் உருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தது. அத்தோடு வீதிகள் தோறும் சிவப்பு, மஞ்சள் கொடிகளும், தோரணங்களும் வீதியின் குறுக்கே எழுச்சியூட்டும் வாசகங்களும் அடங்கிய பதாகைகளும் கட்டப்பட்டிருக்கின்றன.

யாழ். இந்துக் கல்லூரியில் 16-ந் திகதிமுதல் ஆரம்பமான உண்ணாவிரதத்திலும் சிரமதானப் பணிகளிலும் ஏராளமான பக்தர்கள் பங்குபற்றினர்.

நேற்று திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் கோவில், நல்லூர் முலைவைச் சந்தி, சுதுமலை அம்மன் ஆலயம், உடுவில் மயிலங்கூடல் முருகமூர்த்தி கோவிலடி, சங்கானை பஸ் நிலையம், நாவற்குழி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம், பொன்னம்மான் குடியேற்றத் திட்டம், இளவாலைத் தோட்டம் பிள்ளையார் ஆலயம், பருத்தித்துறை ஆதிகூடிப் பிள்ளையார் கோவில், யாழ். இந்துக்கல்லூரி ஆகிய இடங்களிலும் நேற்று உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது. (ஸ)

ஜாம், பியர், கோடியல், புரூடினக்ஸ்
போத்தல்கள் சந்தை விலைக்குத் தொடர்ந்து
கொள்வனவு செய்யப்படும்




**TASTE LINE INDUSTRIES (PVT) Ltd**
No: 14, சீனியர் ஒழுங்கை
(தட்டாதெருச்சந்திக்கு அருகாமை)
யாழ்ப்பாணம். (எ 3076)

## அன்னை பூபதியை தினம் பாடு

அன்னை பூபதியை தினம்பாடு-அவள்
அருமை பெருமையினை தினம்பேசு
தன்னை ஒறுத்தாள் தவம் செய்தாள்-இங்கு
தமிழர் வாழ உயிர் நீத்தாள்

மன்னர் வளர்த்த தமிழ்மொழியை- என்றும்
மங்காப் பெருமை கொண்ட எம்மண்ணை
சின்னத் தனத்தோர் அழித்திடல் கண்டே
சினந்து எழுந்தே தவம் செய்தாள்

'நீர்வை இரதி'

## உலகெல்லாம் உன்முகம்... தாயே!

பொங்கி எழுந்து
போர் முரசு கொட்டி
தங்கத் தமிழுக்குத்
தாலாட்டுப் பாடிய
எங்கள் தாயே!—நீ
எங்கே இருக்கின்றாய்?

பெண்களின் நெஞ்சங்கள்
பேசிடும் பேச்சினை
கண்களின் முன்னே
கண்டபோ தேதான்
அன்னை பூபதி
அழியவேயில்லை— அவள்
ஈழப் பெண்களின்
இதயத்தில் வாழ்கிறாள்—என்னும்
உண்மையை மண்ணில்
இறுக்கமாய் உணர்ந்தோம்!

அன்னையே பூபதி! நீயழிந்தாயெனும்
நினைவினை இனியேனும்
தாமொழித் திடுவோம்...
விடுதலை வேண்டி ஏங்கிடும் உலகினம்- யாவிலும்
உன்முகம் இருப்பதை
உணர்கிறோம் தாயே!

கவிஞர் மு.வே. யோ. வாஞ்சிநாதன்

# தமிழ் அகதிகள் முகாம்கள் மீது தமிழகத்தில் தீவிர கண்காணிப்பு

(டில்லி)

தமிழகத்திலுள்ள இலங்கை தமிழ் அகதிகளைத் தீவிரமாக கண்காணிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முகாம்களிலிருந்து இவர்கள் வெளியே நடமாடத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், வெளியே நடமாடுபவர்கள் கைது செய்யப்பட்டு தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்படுகிறார்கள்.

முகாம்களிலுள்ள சில இலங்கையர்களிடம் துப்பாக்கிகள் மற்றும் வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டதை அடுத்தே இந்த அகதிகள் மீதான கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ரி-ஐ)

## வீரச் சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ஸ்ரீலங்காப் படையினரும் தேசவிரோதிகளும் இணைந்து விடுதலைப்புலிகளின் முழுநேர ஆதரவாளர் ஒருவரை ஒப்பாக்கியாக்க முயன்ற போது அவர் சயனைட் அருந்தி வீரச்சாவடைந்தார்.

மகிழடி மாமாங்கத்தைச் சேர்ந்த பூபாலசிங்கம் மனோகரன் (23 வயது) என்பவரே வீரச்சாவடைந்தவராவர். (க-சி)

## வேலூர் சிறையிலிருந்து
# 3 தமிழ் இளைஞர் தப்பி ஓட்டம்

(சென்னை)

வேலூர் சிறையில் உள்ள இலங்கை அகதிகளின் சிறப்பு முகாமிலிருந்து, மூன்று இலங்கைத் தமிழர்கள் தப்பிச் சென்றுவிட்டனர்.

மேலும் பாஸ்போர்ட், விசா இல்லாமல் பல இடங்களில் தங்கியிருந்த இலங்கைத் தமிழ் அகதிகள் 40 பேர் கைது செய்யப்பட்டு, வேலூர் சிறைச்சாலையில் உள்ள சிறப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி-ஐ)

## குமண வந்தது

(திருநெல்வேலி)

குமண கப்பல் அரச ஊழியர்களையும், மாணவரையும் ஏற்றிக்கொண்டு நேற்று பிற்பகல் பருத்தித்துறைதுறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலில் மாகாண கல்வியமைச்சில் இருக்கும் செல்வி திலகவதி பெரியதம்பியும் நேற்று வந்துசேர்ந்துள்ளார்.

இதேவேளை குமாரி கப்பல் தரித்து நிற்கிறது. விரைவில் திருகோணமலையிலிருந்து மண்ணெண்ணெய் ஏற்றிக்கொண்டு வர உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (157-சி)

## இராசி பலன்

19-04-1993

திங்கட்கிழமை

(தமிழுக்கு சித்திரை 06

திரயோதசி பி. இ. 2 49 வரை. பூரட்டாதி மு. ப 9-16 வரை இராகுகாலம் காலை 7-32 முதல் 9 02 வரை. சுபநேரம் ந. ப. 12-02 முதல் 1-32 வரை. சனிநாள் பிரதோச விரதம்.

மேடம்: குறை கேட்டல், மனமுறிவு, தொழில் சிரமம்.

இடபம்: விருந்தினர் வருகை, தொழில் லாபம், மனமகிழ்ச்சி.

மிதுனம்: பயணம் அனுகூலம், இனசன உதவி, பொதுப்பணி.

கடகம்: தொழில் ஏமாற்றம், கடன் சுமை, தான தர்மம்.

சிம்மம்: அன்னியர் பயம், தொழில் போட்டி, மனஸ்தாபம்.

கன்னி: உறவினர் பாராட்டு மங்கள காரியம், பணவரவு.

துலாம்: கருத்து வேற்றுமை, தைரியம், வெளியூர் சஞ்சாரம்

விருச்சிகம்: குடும்பமுறுகல் கோபவார்த்தை, காரியதடை.

தனுசு: குற்ற உணர்வு, அடிமைத்தனம், கண்டிப்பு.

மகரம்: கண் உடைப்பு, மாபணர் உதவி. குடும்ப சிறப்பு.

கும்பம்: வாக்குப் பகை, பெண் துன்பம், ஏமாற்றம்.

மீனம்: வேண்டியதை அடைதல், வெளியூர் தகவல், புதிய நட்பு.

— ஜோஸ்யர்

## ஞாபகார்த்த தபால் உறை

(யாழ்ப்பாணம்)

ரோட்டரி கழகத்தின் ஸ்தாபகர் போல் பி. ஹரிஸ் ஞாபகார்த்தமாக தபால் உறை ஒன்று இன்று வெளியிடப்படும்.

யாழ். இந்துக்கல்லூரி தபால் அலுவலகத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு முதல் தபால் உறையை வடபிராந்திய தபால் மாஅதிபர் எஸ். எம். சேதுகாவலர் வெளியிட்டு வைப்பார். (இ)

## தொண்டமானுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இம்முறை தேர்தலில் திரு. தொண்டமானின் இ. தொ. கா. பெரும் நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளது. பல தொழிற் சங்கங்களும் திரு தொண்டமானுக்கு எதிராகத் தேர்தலில் இறங்கியுள்ளன.

இத்தேர்தல் திரு. தொண்டமானுக்குப் பெரும் சோதனையாக அமையுமென லங்காமினி கட்சியினர் கூறியுள்ளனர். (இ)

## எதிரணிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதன் பிரகாரம் எதிர்க்கட்சிகளுக்கு எதிராக ஒரு 'மரணப்படை' ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் தனது நோக்கத்தை அடைவாளம் என்று ஐ. தே. க. அரசாங்கம் கருதுவதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மத்திய கொழும்பு கெங்கவத்தை வட்டார மாகாண சபை தேர்தலில் போட்டியிடும் திரு. சிசில் குலதுங்க நீர்கொழும்பு பொலிசாரால் கைது செய்யப்பட்டது ஒரு முன்னோடி நிகழ்வாக இருக்கிறது என்றும் அந்த அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளார். (க-சி)

## அன்னை பூபதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கூட்டங்களில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் கலந்துகொண்டு அஞ்சலி உரை நிகழ்த்தவுள்ளனர்.

## கலை நிகழ்ச்சி

அன்னை பூபதி நினைவின் இறுதி நாள் கலை நிகழ்ச்சிகள் கோட்டங்கள் ரீதியாக இன்று இடம் பெறவுள்ளன.

வலிகாமம் / தீவகம்; இரவு 7 மணியளவில் சிறப்பு நிகழ்ச்சியாக யாழ் இந்துக் கல்லூரியில் தியாக தீபம் - நாட்டிய நாடகம். அன்னையிட்ட தீ - கவியரங்கு, தியாகச் சுடர் - வில்லிசை, இசை நிகழ்வு -

வடமராட்சி: இரவு 7 மணியளவில் சிறப்பு நிகழ்ச்சியாக மாவிச்சந்தி பிள்ளையார் கோவிலில் பூபதியின் புனிதப் பேர் - நாட்டிய நாடகம், தியாகத்தாய் - வில்லிசை

தென்மராட்சி: இரவு 7மணியளவில் சிறப்பு நிகழ்ச்சியாக நாவலடி அ. த. க. பாடசாலை கொடிகாமத்தில் நாட்டிய நாடகம் - தியாகத்தாய், வில்லிசை தியாக தீபம். (க-சி)

## மரண அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை மாணிக்கம்

(முன்னாள் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர்)

முன்னாள் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர் தாமோதரம்பிள்ளை மாணிக்கம் காலமாகிவிட்டார். அன்னார் தாமோதரம்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வனும், நாகரட்ணத்தின் அன்புக் கணவரும், கணபதிப்பிள்ளை (லிகிதர், பரந்தன் இரசாயன தொழிற்சாலை) யோகேஸ்வரி, தம்பிராசா, நேசராசா காலம்சென்ற சர்வேஸ்வரன் மற்றும் யோகேஸ்வரன், செல்வராசா (ஜேர்மனி), ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், வரலட்சுமி, நாகலட்சுமி, மகாலட்சுமி (ஜேர்மனி), சந்தையா (பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை) ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 19-4-93 இல. 61, உருத்திரபுரம் கிழக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக உருத்திரபுரம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மா. கணபதிப்பிள்ளை (மகன்)

இல. 61, D. 8,
உருத்திரபுரம்.

(இ- 26)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office, Sri Lanka under license Number [illegible]/10836/[illegible]

## அன்னை பூபதி நினைவு
# உரும்பிராயில் இன்று பரிசளிப்பு விழா

(திருநெல்வேலி)

அன்னை பூபதி நினைவாக நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம், இன்று மாலை உரும்பிராயில் உள்ள அன்னை பூபதி கலையரங்கில் நடைபெறும்.

மாவட்ட ரீதியில் வெற்றி பெற்றவர்களுக்கும், தமிழீழ ரீதியில் முதல் மூன்று அதிகப்படியான புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும் பதக்கங்கள் வழங்கப்பட உள்ளன.

இப்பரீட்சைக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள், இப்போது அறிவுப் போட்டியில் கலந்துகொண்டனர். (157 இ)

## அரசியல் தஞ்சம் கோர ஜேர்மனியில் அனுமதி

(பேர்லின்)

ஜேர்மனியில் நியாயமான முறையில் அரசியல் புகலிடம் வேண்டுவோர் எவருக்கும் உரிமையுண்டு.

இவ்வாறு ஜேர்மன் நாடாளுமன்ற உறுப்பினரும், வெளிவிவகாரக் கொள்கைக் கமிட்டித் தலைவருமான கலாநிதி ஹாஸ் ரேக்கன் தெரிவித்தார். (சீ-இ)

# தீவிர அரசியலில் சோனியா ஈடுபடுவார்

(சென்னை)

ராஜீவ் காந்தியின் மனைவி திருமதி சோனியா காந்தி தீவிர அரசியலில் ஈடுபடுவதற்கான சாத்தியம் தென்படுவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் மே மாத ஆரம்பத்தில் ராஜீவ் காந்தி அறக்கட்டளை சார்பில் டில்லியில் பிரமாண்டமான மாநாடு ஒன்றை திருமதி சோனியா நடத்தவுள்ளார்.

இம்மாநாட்டிற்குப்பின் சோனியா தீவிர அரசியலில் ஈடுபடக்கூடுமெனவும் கூறப்படுகிறது. (இ)

## அயோத்தி விவகாரம்
# ராவ் மீது கண்டனம்

(புதுடில்லி)

அயோத்தியில் நடந்த டிசம்பர் பாபர் மசூதி தகர்க்கப்பட்ட சம்பவத்திற்குப் பிரதமர் பி. வி. நரசிம்மராவின் இந்திரா காங்கிரஸ் அரசே பொறுப்பேற்கவேண்டும் என பாரதீய ஜனதாக்கட்சி தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக, பாரதீய ஜனதாக்கட்சி அண்மையில் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

இச்சம்பவம் முன்கூட்டியே திட்டமிட்டுச் செய்யப்பட்டதொன்றல்ல என்றும், இவ்விவகாரம், திறமை தீர்வு காணாத பிரதமரின் போக்கே, இந்துக்களின் இச்செயலுக்குக் காரணமாகியது என்றும், பிரதமரின் குற்றச்சாட்டே இதற்கு மூலகாரணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-சி)

## மன்னார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தது.

மன்னார்த் தீவிலும், செட்டிகுளத்திற்கு அப்பால் உள்ள பகுதிகளிலும் பல இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் கூட்டுப் படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றிய தகவல் எதனையும் கூட்டுப்படைத்தலைமையகம் வெளியிடவில்லை. (க-சி)

## பத்திரிகையாளர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டபய லீக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதலுக்கு இந்த பொலிஸ் அதிகாரியே உத்தரவிட்டது விசாரணை மூலம் தெரிய வந்ததை அடுத்தே இவரை பொலிஸ் திணைக்களம் கட்டாயலீவில் அனுப்பியுள்ளதாம்

இதேவேளை வேறு சில பொலிஸார் மீதும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (கி)

## விளையாட்டுக் கழக இசை நிகழ்ச்சி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகத்தினர் மாபெரும் இசை நிகழ்ச்சி ஒன்றினை வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழக மைதானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை இரவு 7-00 மணியளவில் நடத்தவுள்ளனர். (139 இ)

## பாதுகாப்பிற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு படையினருக்காக கணக்கிடப்படாத செலவினமாக பல கோடி ரூபா செலவிடப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன்மூலம் ஏற்படும் பொருளாதார நெருக்கடி நாட்டை பெருமளவில் பாதிக்குமெனவும் அவர்கள் கூறியுள்ளனர் என கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

## வவுனியாவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யேறியுள்ளனர்

தமது குடியிருப்புக்கள் மற்றும் தமது ஜீவனோபாயத் தொழிலையும் இழந்து அகதிகளாக வெளியேறிய இவர்கள் அகதி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் தஞ்சம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வவுனியாவில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள், தமிழர்களைத் தமது பிரதேசத்திலிருந்து துரத்தும் நோக்கை அடிப்படையாகக் கொண்டிருப்பதாகவே கருதப்படுகின்றது. (க-சி)